NOOLAHAM
FOUNDATION

# வரதர் எண்ணிமப்படுத்தல் செயற்றிட்டம் 2016

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | வரதர் எண்ணிமப்படுத்தல் 2016 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2016/0002 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2016 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | வரதரது குடும்பத்தினர், நூலகம் நிறுவனம், கள ஆய்வாளர்கள் |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. அத்துடன் பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளையும் நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

இச்செயற்றிட்டமானது ஈழத்தின் மூத்த ஆளுமையான தி. ச வரதராசன் என்கிற வரதரின் ஆவணங்களை எண்ணிமப்படுத்தி நூலக வலைத்தளத்தில் வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டது. பல்வேறு துறைகளிலும் தடம் பதித்த தி.ச வரதராசன் அவர்களது ஆவணங்களையும், அவரது சேகரிப்பில் காணப்பட்ட ஆவணங்களையும் ஆவணப்படுத்தலின் அவசியம் கருதி இச்செயற்றிட்டம் 2016இல் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்றிட்டத்தில் அவரது சஞ்சிகைகள், புகைப்படங்கள், நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டன.

## அறிமுகமும் பின்புலமும்

வரதர் என்ற பெயரில் நன்கறியப்படும் சண்முகம் வரதராசன் (1924.07.01 - 2006.12.21) அவர்கள் யாழ்ப்பாணம், பொன்னாலையைச் சேர்ந்த எழுத்தாளர். இவரது தந்தை சண்முகம் தாய் சின்னத்தங்கம். இவர் பொன்னாலை அமெரிக்க மிசன் தமிழ்ப் பாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றார். பதினைந்து வயதிலிருந்து எழுதத் தொடங்கிய இவர், வரதர் என்ற புனைபெயரில் சிறுகதை, புதுக் கவிதை, குறுநாவல், இதழியல், பதிப்புத்துறை என இலக்கியத்தின் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். ஈழத்து இலக்கியத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர் என அழைக்கப்பட்டவர்.

இவரது முதற் சிறுகதையான கல்யாணியின் காதல் ஈழகேசரியிலும் முதற் சிறுகதைத் தொகுதியான கயமை மயக்கம் 1960 இலும் வெளியானது. இவர் ஆனந்தன், தேன் மொழி, வெள்ளி, புதினம், அறிவுக் களஞ்சியம்

ஆகிய இதழ்களை நடத்தியதுடன் நாவலர், வாழ்க நூ சங்கிலி மன்னா, மலரும் நினைவுகள், பாரதக்கதை, யாழ்ப்பாணத்தார் கண்ணா், சிறுகதை பட்டறிவுக் குறிப்புகள் ஆகிய நூல்களை எழுதினார். இலங்கையில் 'தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' உருவாவதற்கு காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர். மறுமலர்ச்சி சஞ்சிகையின் (1946 - 1948) ஆசிரியர் குழுவில் ஒருவராவார். 1943 இல் இவர் எழுதிய ஓர் இரவினிலே என்னும் வசனக் கவிதையே ஈழத்தின் முதற் புதுக்கவிதை எனப்படுகிறது.

இவர் தனது "வரதர் வெளியீடு" மூலம் பல நூல்களை வெளியிட்டுள்ளார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கிய வழியே வரதர் வெளியீடாக வெளிவந்த முதல் நூலாகும். இவருக்கு இலங்கைக் கலைக்கழகம் சாகித்திய இரத்தினம் பட்டத்தை அளித்தது. இவ்வகை செயற்பாடுகளின் முக்கியம் கருதி இவரது ஆவணங்களை எண்ணிமப்படுத்தலை பின்புலமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## இலக்குகளும் நோக்கங்களும்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களை ஆவணப்படுத்தலும் அவர்களது வெளியீடுகளை எண்ணிமப்படுத்ததலும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தி.ச. வரதராசன் அவர்களை ஆவணப்படுத்தல்.

## செயற்பாடுகள்

- தொடர்புகளை ஏற்படுத்தல்
- ஆவணங்கள் பற்றியும், நூலகம் நிறுவனம் பற்றியும், இச் செயற்றிட்டம் பற்றியும் கலந்துரையாடல்
- ஆவணங்களை பெறுதல், வகைப்பிரித்தல், எண்ணிமப்படுத்தல்
- ஆவணங்களை மீள ஒப்படைத்தல்
- வாய்மொழி வரலாறு பதிவு செய்தல்
- ஆவணகத்தில் தனிநபர் சேகரம் ஒன்றினை உருவாக்குதல்

## அடைவுகள்

- வரதரின் ஏற்கனவே நூலகத்தில் இருந்த நூல்களுடன் சேர்த்து மொத்தமாக 12 நூல்கள் மின்வருடப்பட்டு நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.
- வரதர் தொடர்பான சில வெளியீடுகள் ஆவணப்படுத்தப்பட்டன.
- வரதர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட மறுமலர்ச்சி சஞ்சிகையின் 25 இதழ்கள், தேன்மொழி சஞ்சிகையின் ஓர் இதழ், புதினம் சஞ்சிகையின் 50 இதழ்கள், வெள்ளி சஞ்சிகையின் 28 இதழ்கள், அறிவுக்களஞ்சியம் சஞ்சிகையின் 37 இதழ்கள் என 140க்கும் அதிகமான இதழ்கள் ஆவணப்படுத்தப்பட்டன.
- வரதர் வெளியீடு மூலம் வெளியான நூல்களில் ஏற்கனவே நூலகத்தில் இருந்த ஆவணங்களுடன் சேர்த்து மொத்தமாக 50 ஆவணங்கள் மின்வருடப்பட்டு நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.
- ம்றுமலர்ச்சி இதழ் மீள்பதிப்புச் செய்வதற்கு ஏற்ற வகையில் மின்வருடி வழங்கப்பட்டது. இதன்மூலம் கோப்பாய் சிவம், செல்லத்துரை சுதர்சன் ஆகியோரது முயற்சியில் மறுமலர்ச்சிச் சஞ்சிகையின் முதல் 23 இதழ்களைக் கொண்ட தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.
- வரதர் தொடர்பான வாய்மொழி வரலாற்றை அவருடைய மகள் தேன்மொழி வரதராசாவிடமிருந்து பெறப்பட்டது. (31நிமிடம் 57 செக்கன்கள் கொண்ட காணொளி)
- ஈழத்தின் முதற் கவிதைப் பதிப்பான தேன்மொழி பதிப்பின் பிரதிகளைப் பெறமுடிந்தமை

- இவரது சில ஆவணங்களை செங்கை ஆழியான் குடும்பத்தினரிடமிருந்து பெற்றுக்கொண்டமை.
- நூல்கள், நூல் விபரங்கள், வாய்மொழி வரலாறு, புகைப்படங்கள், தட்டச்சுப் பிரதிகள் உள்ளிட்ட 30க்கும் அதிகமான ஆவணங்களை உள்ளடக்கியதாக வரதர் சேகரம் ஆவணகம் வலைத்தளத்தில் உருவாக்கப்பட்டது.
- ஆவணகத்தில் அவருடைய ஓவியங்களை பெறமுடிந்தமை

## எதிர்கொண்ட சவால்கள்

- இலங்கையில் ஈழப்போர் காரணமாக தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. இதன் காரணமாக வரதரது ஆவணங்களை பேணமுடியாமையினால் அவருடைய குடும்பத்தினரிடம் அவர் தொடர்பான ஆவணங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமை பெரும் சவாலாக அமைந்தது.
- ஆனந்தன் சஞ்சிகையின் ஒரு இதழ் கூடக் கிடைக்கவில்லை. 1990களில் வெளியான புதினம் சஞ்சிகையின் ஒரு இதழும் கிடைக்கவில்லை.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஈழத்தின் முதல் கவிதை இதழான தேன்மொழி சஞ்சிகையின் பெரும்பாலான பக்கங்கள் இத் தேடலில் கிடைத்தன. அவற்றை தொகுத்து நூலக நிறுவனம் ஒரு நூலாக வெளியிடலாம்.
- கிடைக்காத நூல்கள், சஞ்சிகைகளை எதிர்காலத்தில் படிப்படியாகப் பெற்று ஆவணப்படுத்த வேண்டும்.
- வரதரது பதிப்பகமான “வரதர் வெளியீடு” மூலம் வெளியான நூல்களது விபரங்கள் அடங்கிய நூல் விபரப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.
- வரதருடன் தொடர்பிலிருந்த எழுத்தாளர்கள், வாசகர்களிடமிருந்து அவரைப் பற்றிய மனப்பதிவுகள் ஒலிப்பதிவு செய்யப்படலாம்.